தினமணி

# மறைக்கப்படும் மானியத் திட்டங்கள்!

First Published : 11 Aug 2010 02:39:19 AM IST



தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் அறிவித்த விவசாய கடன் தள்ளுபடி திட்டத்தால் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு பயனில்லை என்ற விவாதம் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்

ஈரோடு: தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் குறித்த விவரங்கள், பயன்கள், குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு தெரியாமல் மறைக்கப்படுகிறது.

வேளாண்மை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் தனித்துறையாக தோட்டக்கலைத்துறை செயல்பட்டு வருகிறது. விவசாயத்தில் பணப்பயிர் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக வேளாண்மைத் துறையில் இருந்து பிரித்து தோட்டக்கலைத்துறை ஏற்படுத்தப்பட்டது.

மா, பலா, கொய்யா, சப்போட்டா உள்ளிட்ட பழ சாகுபடி, ரோஜா, மல்லிகை, சம்பங்கி உள்ளிட்ட மலர் சாகுபடி, முருங்கை, தக்காளி, புளி உள்ளிட்ட காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தோட்டக்கலைத்துறை மூலம் அதிகபட்சமாக 50 சதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

பழ வகை மரங்கள் சாகுபடியில் பெரு விவசாயிகள் மட்டுமே ஈடுபடுகின்றனர். இதனால் தோட்டக்கலைத் துறையின் மூலம் உள்ள மானியத் திட்டங்கள் குறித்து நன்கு அறிந்துகொண்டுள்ளனர். குறு மற்றும் சிறு விவசாயிகளில் பலர் மல்லிகை, சம்பங்கி

உள்ளிட்ட மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவ் விவசாயிகளுக்கு இந்த மானியத் திட்டங்கள் குறித்த விவரங்கள் தெரிவதில்லை.

இதனால் ஒவ்வொரு ஆண்டும் தோட்டக்கலைத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் 80 சத தொகை பெரு விவசாயிகளையே சென்றடைகிறது.

அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் பண்ணை வீட்டுத் தோட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும் பழ மர சாகுபடி நிலப்பரப்பை அதிகரித்துக்கொள்ளவே இத் திட்டம் உதவுகிறது.

மாவட்டத்தில் எப்போதாவது ஒரு முறை, எங்காவது சில ஒரு இடங்களில் மட்டுமே நடைபெறும் சிறப்பு மனுநீதி நாள் முகாம்களில் 4 மணி நேரம் அரங்கு அமைத்து திட்டங்கள் குறித்து அங்குவரும் சில விவசாயிகளிடம் மட்டும் தெரிவிப்பதனால் மானியத் திட்டங்கள் குறித்த விவரங்களை அனைத்து விவசாயிகளும் அறிந்துகொள்ள முடியாது.

மல்லிகை, சம்பங்கி போன்ற மலர் சாகுபடியில் குறு மற்றும் சிறு விவசாயிகள் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடியில் சிக்கிப் பரிதவித்துவரும் சிறு, குறு விவசாயிகள் உணவுக்கு ரேசன் அரிசி வாங்கிகொண்டு, தங்களது நிலங்களில் பணப் பயிர்களை சாகுபடி செய்துவருகின்றனர்.

இப்பயிர் சாகுபடிக்கு அரசு மானியம் வழங்குகிறது என்ற விவரம் பெரும்பாலான விவசாயிகளுக்குத் தெரிவதில்லை.

அரசின் மானியத் திட்டங்கள் சென்றடைவதன் மூலம் இவ்விவசாயிகளின் பொருளாதார நிலை சிறிதளவேனும் மேம்படும்.

இதற்கு வேளாண் விரிவாக்க மையங்கள் போன்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தோட்டக்கலைத் துறைக்கும் தனி அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும்.

இது இப்போதைக்கு சாத்தியமில்லை எனில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தோட்டக்கலைத் துறையின் சேவை மையங்களை ஏற்படுத்த வேண்டும்.

தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் அறிவித்த விவசாய கடன் தள்ளுபடி திட்டத்தால் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு பயனில்லை என்ற விவாதம் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இதேபோல் பெருமளவில் மானியத் திட்டங்களை கொண்டுள்ள தோட்டக்கலைத் துறையின் திட்டங்களும் குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு எந்த பயனையும் அளிக்கவில்லை என்ற விவாதமும் விவசாயிகளால் முன்வைக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

**விவசாயிகளுக்கான வேளாண் பட்டப் படிப்பு அறிமுகம்**

First Published : 10 Aug 2010 12:45:37 PM IST

திருச்சி, ஆக. 9: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் முப்பது வயதைக் கடந்த விவசாயிகளுக்காக வேளாண் பட்டப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றார் அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பி. முருகேச பூபதி.

இதுகுறித்து திருச்சியில் திங்கள்கிழமை அவர் அளித்த பேட்டி:

"தமிழகத்தில் 80 லட்சம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன. ஆனால், இவர்களில் 10 சதத்துக்கும் குறைவானவர்களுக்குத்தான் வேளாண் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு பெரும்பாலானவர்களுக்கு ஏற்படாததால், பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முடிவுகள் விவசாயிகளைச் சென்றடைவதில்லை. அதனால், புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை பயனில்லாமல் போய்விடுகின்றன.

இந்த பிரச்னையை தவிர்க்கவும், விவசாயிகளிடையே பண்ணைத் தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் இந்தப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வித் திட்டத்தின் மூலம் இளநிலை பண்ணைத் தொழில்நுட்பம் என்ற பட்டப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதில், 30 வயதைக் கடந்த, பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற விவசாயிகள் சேரத் தகுதியுடையவர்கள். இதற்கான சேர்க்கை குறித்த அறிவிப்பு செப்டம்பர் முதல் வாரத்தில் வெளியிடப்படும். மூன்றாண்டு கால இந்தப் படிப்பில் 6 பருவத் தேர்வுகள் நடத்தப்படும். தமிழ் வழியிலான இந்தப் பட்டப் படிப்பில் மண் பரிசோதனை, தோட்டக்கலை, வனவியல் உள்பட பல்வேறு தலைப்புகளில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள வேளாண் கல்லூரிகளில் வகுப்புகள் நடத்தப்படும்.

மேலும், தொலைநிலைக் கல்வித் திட்டம் மூலம் எம்.எஸ்ஸி. (கரும்பு தொழில்நுட்பம்), எம்.எஸ்ஸி. (உணவு பதப்படுத்துதல்), எம்.பி.ஏ. ஆகிய 3 பட்டப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தவிர, ஏற்கெனவே 3 பட்டயப் படிப்புகளும், 22 சான்றிதழ் படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

நகர்ப்புறங்களில் வீட்டைச் சுற்றி தோட்டம் அமைக்கப் போதிய இட வசதி இல்லாததால், மாடித் தோட்டம் அமைக்கும் பழக்கம் பிரபலமடைந்து வருகிறது. எனவே, மாடித் தோட்டம் அமைப்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தற்போது, நடைமுறையில் உள்ள கரும்பு அறுவடை இயந்திரத்தின் மூலம் வெட்டப்படும் கரும்புகள் சில துண்டுகளாகிவிடுகின்றன. இந்த பிரச்னையை தவிர்க்கும் வகையில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன கரும்பு அறுவடை இயந்திரம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதில், கரும்பு தோகையை முழுவதுமாக நீக்கிவிட்டு, முழுக் கரும்பை வெளியில் தள்ளிவிடும்.

இந்த இயந்திரத்தின் மதிப்பு | 1.50 கோடி. விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த இயந்திரத்தை லாப - நஷ்ட நோக்கமின்றி வாடகைக்கு விடப்படவுள்ளது. மேலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட | 6 கோடி மூலம் மேலும் 4 இயந்திரங்கள் வாங்கப்படவுள்ளன.

இந்த இயந்திரத்தில் மணிக்கு 20 - 22 டன்களும், ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 8 மணிநேரமும் அறுவடை செய்யலாம்.

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் ஒரு கோடி ரூபாய் செலவில் கலையரங்கம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதேபோல, மேலும் சில அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன' என்றார் முருகேச பூபதி.

**காடை வளர்ப்பு இலவச பயிற்சி முகாம் நாளை தொடக்கம்**

First Published : 10 Aug 2010 10:42:17 AM IST

ஈரோடு, ஆக.9: காடை வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம், ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் புதன்கிழமை(ஆக.11) தொடங்கவுள்ளது.

இம் மையத்தின் தலைவர் வி.தனசீலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஈரோடு- சத்தி சாலை, சிஎன்சி கல்லூரி அருகில் உள்ள மையத்தில் வரும் 11 மற்றும் 12-ம் தேதிகளில் இந்த பயிற்சி முகாம் நடைபெறும். காடை வளர்ப்பு குறித்து விடியோ படக்காட்சி மற்றும் கலந்துரையாடல் மூலம் விளக்கம் அளிக்கப்படும். அருகில் உள்ள கால்நடைப் பண்ணைக்கு அழைத்துச் சென்று நேரடிப் பயிற்சி அளிக்கப்படும்.

இலவசமாக அளிக்கப்படவுள்ள இப் பயிற்சியில் விவசாயப் பண்ணையாளர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள் 2291482 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**"விவசாயிகள் தேவைக்கு ஏற்ப மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு'**

First Published : 10 Aug 2010 12:31:52 PM IST

மேட்டூர், ஆக.9: மேட்டூர் அணையிலிருந்து விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது என்று, பொதுப்பணித் துறை திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் மூர்த்தி கூறினார்.

பருவகால ஆய்வுப் பணிக்காக மேட்டூர் அணையை பார்வையிட திங்கள்கிழமை வந்த அவர், அணை மதகுகள் பராமரிப்பு மற்றும் மேல்மட்ட, கீழ்மட்ட மதகுகளின் தற்போதை நிலை குறித்து ஆய்வு செய்தார். பொதுப்பணித் துறை சேலம் கண்காணிப்பு பொறியாளர் கணேச மாரச்சன், உதவி செயற் பொறியாளர் குமாரசாமி, உதவிப் பொறியாளர் முருகேசன் ஆகியோருடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: ஜூலை 28-ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

சில நாள்கள் விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. பிறகு விநாடிக்கு 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. இந்த தண்ணீர் குறுவை சாகுபடிக்கும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் போதுமானதாக உள்ளது.

விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. கடைமடை பகுதிகளுக்கு தற்போது தண்ணீர் தேவையில்லை. மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வரும் 15-ம் தேதி தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து ஆலோசனை நடத்தி முடிவெடுக்கப்படும் என்றார் அவர்.

**தினமலர்**

பட்டுப்புழு வளர்ப்பு குறித்த கருத்தரங்கு

எழுத்தின் அளவு:

Buzz

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,01:39 IST

செங்கல்பட்டு  ஆனூர் விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு குறித்த கருத்தரங்கு நடந்தது.செங்கல்பட்டு அடுத்த ஆனூர் கிராம முன்னேற்ற அறக்கட்டளையும், தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறையும் இணைந்து கிராம விவசாயிகளை பட்டுப்புழு வளர்க்க ஊக்கப்படுத்தும் வகையில், பட்டுப்புழுவளர்ப்பு குறித்த கருத்தரங்கம் நடந்தது.கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகளிடம், பட்டுவளர்ச்சித் துறை அதிகாரிகள், பட்டுப்புழு வளர்க்கும் இடத்திற்கே அழைத்துச் சென்று செயல்விளக்கமளிக்க ஒப்புதல் வழங்கினர். அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 15 விவசாயிகளை பட்டு வளர்ச்சித்துறை பட்டு உற்பத்தி அலுவலர்கள் குமார், இருதயராஜ் மற்றும் அறக்கட்டளை தலைவர் தேவராஜன் ஆகியோர் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்திலுள்ள கங்காவரம் கிராம விவசாயிகள் வளர்க்கும் பட்டுப்புழு பண்ணைகளுக்கு நேரில் அழைத்துச் சென்றனர்.அங்கு பட்டுப்புழு வளர்க்கும் முறைகள், பராமரிப்பு, அதன்மூலம் கிடைக்கும் பலன்கள், பட்டுப்புழு வளர்ப்பிற்குப்பின் விற்பனை குறித்து விவசாயிகளிடம் விளக்கினர்.

**வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பல பணிகளை செய்ய வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:33 IST

செஞ்சி:தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்படி கிராம சாலைகளை மேம்படுத்த வேண்டும் என்று ஒன் றிய கவுன்சிலர் கோரிக்கை விடுத்தார். செஞ்சி ஒன்றிய குழுவின் சாதாரண கூட்டம் சேர்மன் ரத்னா கணபதி தலைமையில் நடந்தது. பி.டி.ஓ.,க்கள்

பத்மநாபன், ஏகாம் பரம் முன்னிலை வகித்தனர். இதில் ஒன்றிய பொதுநிதியில் இருந்து 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 8 பணிகள் தேர்வு செய்யப்பட்டன.

தீர்மானங்கள் நிறைவேற்றிய பின்னர் நடந்த விவாதத்தில் பேசிய கவுன்சிலர் விஜயராகவன் கணக் கன்குப்பத்தில் ஜாப் கார்டு வழங் காமல் இருப்பது குறித்து கடந்த கூட்டத்தில் கேள்வி எழுப்பினேன். இதன் மீது நடவடிக்கை எடுக் காததால் கணக்கன்குப்பம் மக்கள் நலப்பணியாளரும், ஊராட்சி உதவியாளரும் கேலி பேசுகின் றனர். கவுன்சிலர்களின் புகார் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தால் இது போன்று கேலிக்கு இடம் இருந்திருக்காது. கவுன்சிலர்களின் புகார்கள் மீது விசாரித்து நடவடிக்கை எடுங்கள் என்றார்.அடுத்து பேசிய கவுன்சிலர் அணையேரி ரவி, வேலை உறுதி திட்டத்தில் ஒரே மாதிரியான பணிகளையே செய்கின்றனர். இதை மாற்றி மோசமாக உள்ள கிராம சாலைகளை அகலப்படுத்தி, மேம்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இந்த கூட்டத்தில் கல்வித்துறை, வேளாண்மைத் துறையில் இருந்து பிரதிநிதிகள் யாரும் வரவில்லை. இதற்கான காரணத்தை கேட்டு கடிதம் அனுப்பு மாறு சேர்மன் ரத்னா கணபதி அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.கவுன்சிலர்கள் பச்சையப்பன், குலசேகரன், தயாளன், லட்சுமி காந்தன், கந்தாமணி, கமலா, சித்ரா, ஜெயலட்சுமி, பொற்கலை, ஜெயந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மரக்கன்றுகள்நடும் விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,01:26 IST

நெல்லிக்குப்பம்:மேல்பட்டாம்பாக்கத்தில் மரக்கன்றுகளை தாசில்தார் பன்னீர்செல்வம் நட்டார்.பண்ருட்டி சிவிக் எக்ஸ் னோரா சார்பில் மேல்பட் டாம்பாக்கம் பேரூராட்சியில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. பேரூராட்சி தலைவர் ஜெயமூர்த்தி தலைமை தாங்கினார். பண்ருட்டி தாசில்தார் பன்னீர்செல்வம் மரக்கன்றுகள் நட்டார். சிவிக் எக்ஸ்னோரா தலைவர் பசுபதி, துணைத் தலைவர் கதிர்காமன், பொன்வேந் தன், வக்கீல் கோபாலகிருஷ்ணன், தி.மு.க., செயலாளர் சடாட்சரம், கிராம நிர்வாக அலுவலர் வீரராவ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ரூ.5 மானியத்தில் ஒரு கிலோ விதை நெல்: விவசாயிகளுக்கு அழைப்பு
பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:26 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி வேளாண் உதவி இயக்குனர் எம்பெருமாள் வெளியிட்ட அறிக்கை: திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 65 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது நேரடி நெல் விதைப்பு பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஆறுகளில் தண்ணீர் குறைவாக செல்வதால் உள்வாய்காலில் போதுமான அளவு நீர் வராததால் நாற்றுவிடும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. கூடுதலாக தண்ணீர் திறந்தால் நாற்றுவிடும் பணி தீவிரமாக நடக்கும். திருத்துறைப்பூண்டி, கட்டிமேடு, விளக்குடி, ஆலத்தம்பாடி ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சி.ஆர்., 1009, சாவித்ரி ஆதார விதை மற்றும் சான்று பெற்ற விதை நெல் கிலோவுக்கு ஐந்து ரூபாய் மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது. போதுமான அளவு விதை நெல் இருப்பு உள்ளது. மேலும், 50 சதவீத மானிய விலையில் உயிர் உரங்கள், உரம் தெளிக்கும் பாத்திரம், மண்வெட்டி, கடப்பாரை, தார்ப்பாய், பவர்டில்லர் ஆகிய விவசாய கருவிகள் விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம்

**நேரடி பயிர் கடன் அதிகம் வழங்க வேண்டும்: வங்கியாளர்கள் கூட்டத்தில் வலியுறுத்தல்**
பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:21 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் மாவட்ட வங்கியாளர்கள் கூட்டம் நடந்தது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் ராகவன் வரவேற்றார்.

**கலெக்டர் சண்முகம் பேசியதாவது**: மகளிர் குழுக்களுக்கு இந்தாண்டு 32 கோடி பல்வேறு திட்டங்களில் கடன் வழங்க திட்டமிடப்பட்டு 17.4 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதை விரைவுபடுத்த வேண்டும். நேரடி கடன் உதவி 1,674 குழுக்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில், 706 குழுக்களுக்கு மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இதை விரைவுபடுத்த வேண்டும். தகுதியுள்ள புதிய குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவி வழங்க வேண்டும். இந்திராநினைவு குடியிருப்பு திட்டத்தில் வீடு கட்டும் பயனாளிக்கு கூடுதல் கடன் தொகையை ஆகஸ்ட் இறுதிக்குள் வழங்க வேண்டும். 5.99 கோடி ரூபாய் 13வது நிதிக்குழு மானியத்தில் இருந்து மத்திய அரசு மூலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்துக்களுக்கும் வழங்க வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை வங்கிகள் சம்மந்தப்பட்ட பகுதியில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு வளர்ச்சிப்பணிக்காக அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் ஞானவேல் பேசுகையில், ""எஸ்.சி., எஸ்.டி.,க்கான முன்னுரிமை கடனை விரைவாக வழங்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் புதிய திட்ட செயல்பாடு இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதை வங்கியாளர் பதிவிறக்கம் செய்து செயல்படுத்த வேண்டும். வேளாண் கடன், கல்விக்கடனில் முன்னுரிமை கொடுத்து வங்கிகள் கடன் வழங்க வேண்டும்," என்றார்.

நபார்டு உதவி பொது மேலாளர் ரவிகுமார் பேசுகையில், ""கடந்தாண்டு பயிர் கடன் இலக்கைவிட அதிகமாக வழங்கப்பட்டது. இந்தாண்டு கூடுதலாக வழங்க முயற்சிக்க வேண்டும். நகைக்கடனுடன் நேரடி பயிர் கடனை அதிக எண்ணிக்கையில், அதிகத்தொகையில் வழங்க வேண்டும். அக்ரி கிளினிக், அக்ரி பிசினஸ் சென்டர்கள் அமைக்க வங்கிகள் முன்னுரிமை வழங்கி கடன் வழங்க வேண்டும்," என கேட்டுக் கொண்டார். முன்னோடி வங்கி மேலாளர் வெற்றிச்செல்வன் நன்றி கூறினார்.

**முருங்கை விலை சரிவு: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:17 IST

ப.வேலூர்: ப.வேலூரில் முருங்கை விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை "கிடுகிடு'வென சரிந்துள்ளது. ப.வேலூர் அதன் சுற்றுவட்டாரத்தில் நீண்ட கால பயிரான முருங்கை பயிரிடுகின்றனர். முருங்கைக்காய்கள் பரமத்தி, கரூர் பரமத்தி ஆகிய இடங்களில் கூடும் வாரச்சந்தைகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. ஒரு மாதத்துக்கு முன், ஒரு கிலோ முருங்கைக்காய் 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது 5 ரூபாய் வரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. முருங்கை விலை சரிவு ப.வேலூர் விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.

இதுகுறித்து ப.வேலூர் முருங்கை விவசாயிகள் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டம் வளையப்பட்டியில் இருந்து முருங்கை செடி 15 ரூபாய்க்கு வாங்கி வரப்படுகிறது. ப.வேலூர் சுற்றுவட்டாரத்தில் முருங்கை கணிசமான அளவு பயிரிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் முருங்கை பயிரிட 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஒரு முறை பயிர் செய்தால் 20 ஆண்டு வரை மகசூல் எடுக்க முடியும். ஆடி, மார்கழியில் முருங்கை அறுவடை நடக்கும். ஆடி மாதத்தில் அதிக காற்று அடிக்கும் என்பதால் முருங்கையில் உள்ள பூக்கள் கொட்டிவிடும். அதனால், விலையும் கடுமையாக இருக்கும். இந்தாண்டு காற்று குறைவாக இருப்பதால், முருங்கையில் காய்ப்பிடிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளது. எனவே, முருங்கை விலை படுதாளத்துக்கு சென்றுள்ளது. முருங்கை விலை சரிவு, விற்பனைக்கு கொண்டு செல்லும் வண்டி வாடகைக்குக்கூட கட்டுபடியாகவில்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் மூலிகை பவுடர்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,23:42 IST

சிவகங்கை : தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ஆடுதுறை-39, ஆடுதுறை- 45 நெல் ரகங்கள் ஐந்து ரூபாய் மானியத்திலும், வேளாண் கருவிகள் 50 சதவீத மானியத்திலும் வினியோகிக்கப்படுகின்றன. நெற் பயிரை சேதம் செய்யும் கதிர்நாவாய் பூச்சி, இலைப்பேன், தண்டு துளைப்பான், அஸ்வினி நோய் தாக்குதலை கட்டுப் படுத்தும் வசம்பு மூலிகை பவுடர் 50 சதவீத மானியத்தில், ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சிவகங்கை வேளாண் விரிவாக்க மையம், மதகுபட்டி துணை வேளாண் மை மையங்களில் இடுபொருட்களை பெறலாம்.

**நாற்று நடவில் ஆள் பஞ்சம் போக்க வந்தது எந்திரம்: உணவு பாதுகாப்பு படையினர் தயார்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:05 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நெல் நாற்று நடவு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டது. உணவு பாதுகாப்பு படையை சேர்ந்த 20 பேர் நேரடி விளக்கம் அளித்தனர்.

கேரள விவசாய பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் ஜெயக்குமார் மற்றும் குழுவினரால், அவல்பூந்துறை, ரகுபதி நாயக்கன் பாளையம் ஆகிய கிராமங்களில் வயல்வெளி பயிற்சி அளிக்கப்பட்டது. எந்திர மயமாக்கப்பட்ட நெல் நாற்று நடவு தொடர்பான வகுப்பு மற்றும் களப்பயிற்சியில் 20 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாபு கூறியதாவது: எந்திரத்தில் நடவு செய்வதற்கு ஏற்ப, பிளாஸ்டிக் தகடு அல்லது பாலித்தின் காகிதத்தில் நாற்றங்கால்களை தயாரிக்க வேண்டும். இதற்கான பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. பேராசிரியர் ஜெயக்குமார் உதவியுடன் 20 பேருக்கு

பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள்தான் நெல் நாற்று நடவு எந்திரத்தில் நெல்நாற்று நடும் பணியில் ஈடுபடுவர். இவர்களுக்கு, "உணவு பாதுகாப்பு படை' என, பெயரிடப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 735 ஏக்கரில் எந்திரம் மூலம் நெல் நாற்று நடவு செய்திட 329 விவசாயிகள், எட்டு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பதிவு செய்துள்ளனர். ஆட்கள் பற்றாக்குறையான இந்த நேரத்தில் நெல் நாற்று நடவு எந்திரம் மிகவும் பயனுள்ளது. விவசாயிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். இதன் மூலம் நடவு செலவு வெகுவாக குறைகிறது. ஈரோடு மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்பு படை, தமிழகம் முழுவதும் பரவி பயன் சேர்க்கும் என, நம்புகிறோம். கும்பகோணம், நாமக்கல், சேலம் பகுதி கூட்டுறவு சங்கத்தினரும் களப்பயிற்சியில் பங்கேற்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்திக்கு விலை கிடைக்காததால் லாரிகளை சிறைபிடித்து போராட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:14 IST

திருச்செங்கோடு: விவசாய கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (டி.சி.எம்.எஸ்.,) பஞ்சு ஏலத்தில் முறைகேடுகள் நடப்பதாக கூறி, உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் லோடு ஏற்றிய லாரிகளை சிறை பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. திருச்செங்கோட்டில் உள்ள டி.சி.எம்.எஸ்., சில் நடந்த பருத்தி ஏலத்தில், வியாபாரிகளுடன் சேர்ந்து சங்க அதிகாரிகள் விலைகுறைப்பில் ஈடுபடுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டினார். மேலும், "பஞ்சுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரை ஏலத்தை நடத்த விட மாட்டோம்' எனக் கூறி உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். குடோனிலிருந்து பஞ்சு மூட்டைகளை ஏற்றிச்சென்ற லாரிகளையும் விவசாயிகள் சிறைப்பிடித்தனர். அதனால் டி.சி.எம்.எஸ்., வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் கருணாநிதி மற்றும் டி.சி.எம்.எஸ்., தனி அதிகாரி ஆனந்தி, மேலாளர் திரவியம், உதவிச் செயலாளர் மாரிமுத்து உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சு வார்த்தை நடத்தினார். நாளை (இன்று) காலை 10 மணிக்கு ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இது குறித்து இளையமங்கலத்தை சேர்ந்த விவசாயி கந்தசாமி கூறியாதவது: நாமக்கல் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்துப் போனதால் விவசாயம் குறைந்து போனது. மேலும், மத்திய அரசின் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் சுலபமாக 100 ரூபாய் கூலி கிடைப்பதால், விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், பருத்தி பறிக்க கிலோவுக்கு 15 ரூபாய் கூலி கொடுக்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், கடந்த வாரம் 10 கிலோ எடை கொண்ட முதல் தர சுரபி ரக பருத்தி பஞ்சு மூட்டை 480 ரூபாய் முதல் 550 ரூபாய் வரை ஏலம் போனது. இந்த வாரம் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் வகையில், 10 கிலோ மூட்டையை அதிக பட்சமாக 330 ரூபாய்க்கு ஏலம் கேட்டனர். வியாபாரிகளுடன் அதிகாரிகள் கைகோர்த்துக்கொண்டு செயல்படுவதால், உரிய விலை கிடைக்கும் வரை பருத்தி ஏலத்தில் கலந்து கொள்ள மாட்டோம். கொள்முதல் செய்யப்பட்ட பருத்தியையும் எடுத்து செல்ல அனுமதிக்க மாட்டோம், என்றார்.

**கிராம சபை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,23:41 IST

சிவகங்கை : கலெக்டர் மகேசன் காசிராஜன் அறிக்கை: மாவட்டத்தில் 445 ஊராட்சிகளிலும், வரும் 15ம் தேதி கிராம சபை கூட்டம் நடக்க உள்ளது. ஊராட்சியின் எல் லைக்கு உட்பட்ட பொது இடத்தில், வார்டு சுழற்சி முறையில், காலை 11 மணிக்கு நடத்த வேண்டும். வேலை உறுதி திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலக பராமரிப்பு உள்ளிட்ட தலைப்புகளில் விவாதம் நடத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காலிங்கராயன் பாசன வயல்களில் நெல் நடவுக்கு உழவுப்பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:03 IST

ஈரோடு: காலிங்கராயன் வாய்க்கால் பாசன வயல்களில், நெல் நடவுக்காக உழவுப் பணி தீவிரமாக நடந்து வருகிறது. காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் ஆண்டு தோறும் 17 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் நேரடியாக பாசன வசதி பெறுகிறது. வாய்க்காலை ஒட்டியுள்ள கிணற்றுப் பாசனம் மூலம் 3,000 ஏக்கர் பயன்பெறுகிறது. அதிகளவு நெல், கரும்பு, வாழை, மஞ்சள் பயிரிடப்படுகிறது. மாமரத்துபாளையம், பி.பி. அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதிகளில் 5,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி அதிகளவு நடக்கிறது.

வாய்க்காலில் ஆண்டுதோறும் ஜூன் 16ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். நடப்பாண்டில் வாய்க்காலில், கழிவுநீரை தடுக்கும் வகையில், கான்கிரீட் தடுப்பு சுவர் அமைப்பதுடன், வாய்க்கால் சீரமைப்பு பணி நடந்தது. இதனால், பாசனத்துக்கு ஜூலை 11ல் தான் தண்ணீர் திறக்கப்பட்டது. சீரமைப்பு பணிகள் நடந்தபோது விவசாயிகள் இயற்கை உரத்துக்காக ஜூன் மாதத்தில், வயலில் ஆடு, வாத்துகளை பட்டி போட்டனர். உழவுக்காக வயலில் தண்ணீர் தேக்கி, கரைகளை சீரமைத்தனர். நெல் நாற்றுக்காக நாற்றாங்கால் அமைத்தனர். நெல் நாற்றுகள் 30 நாட்கள் வளர்ந்த பின் நடவுப் பணிகளை துவக்க உள்ளனர்.

தற்போது, வயலில் தண்ணீர் தேக்கி 15 நாட்களான நிலையில் உழவுப் பணிகளை துவக்கியுள்ளனர். வைராபாளையம், கருங்கல்பாளையம், அக்ரஹாரம் பகுதிகளில், வாய்க்கால் வலது கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் ஏற்கனவே உழவுப் பணியை முடித்த விவசாயிகள், வயலை நடவுக்காக சீரமைக்க மாடுகள் மூலம் மட்டையடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பத்து நாட்களில் நாற்றங்காலில் நாற்றுகள் தயாரானதும், நெல் நடவுப் பணிகளை துவங்க உள்ளனர். தாமதமாக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், விவசாயிகள் குறுகிய நாட்கள் விளையும் நெல் ரகங்களை நடவு செய்ய உள்ளனர்.

வைராபாளையத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: வழக்கமாக, ஆடி பெருக்கு முடிந்ததும் நெல் நடவுப் பணிகளை துவக்குவோம். நடப்பாண்டில், நெல் நாற்று நடுவதுக்கு ஆவணி முதல் வாரம் வரையாகும் என எதிர்பார்க்கிறோம். தாமதமாக சாகுபடி பணிகளை துவக்கியுள்ளதால், சென்றாண்டு போல குறுகிய கால நெல் ரகங்களை

சாகுபடி செய்கிறோம். நவம்பர் மாதம் இறுதியில் அறுவடை செய்ய முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**காய்கறி விலை வீழ்ச்சி: மகிழ்ச்சியில் பெண்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:31 IST

கரூர்: கரூரில் கடந்த சில மாதமாக அதிகரித்து வந்த காய்கறி விலை குறையத் துவங்கியதால் பெண்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். கரூரில் கடந்த சில நாட்களாக பல்வேறு காய்கறிகளின் விலை பல மடங்கு உயர்ந்து இருந்தது. கரூர் நகர் பகுதியில் கிலோ தக்காளி விலை 45 ரூபாய், உருளைக்கிழங்கு கிலோ 25 ரூபாய், கேரட் 50 ரூபாய், பீன்ஸ் 25 ரூபாய், முட்டைக்கோஸ் 25 ரூபாய் என கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இஞ்சியின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஒரு கிலோ இஞ்சி விலை 80 ரூபாயாக இருந்தது.

ஓரிரு மாதமாக ஏற்றத்திலிருந்த காய்கறி விலை, இரண்டு நாட்களாக வீழ்ச்சியடைந்ததால் பெண்கள் மகிழ்ச்சியடைந்தனர். கரூர் உழவர் சந்தையில் தக்காளி கிலோ ஏழு ரூபாய்க்கும், வெண்டைக்காய், கொத்தாவரங்காய், புடலங்காய் 10 ரூபாய் அளவுக்கு விற்கப்படுகிறது. வெளி கடைகளில் இஞ்சி 50 ரூபாய், கேரட், பீன்ஸ் முறையே 40 ரூபாய், கோஸ் 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெண்டைக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறி விலை 15 முதல் 25 ரூபாய் அளவுக்கு குறைந்துள்ளது.

**வால்பாறையில் இந்த ஆண்டு தேயிலை உற்பத்தி அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,01:10 IST

வால்பாறை: ""வால்பாறையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதாக,'' உபாசி இயக்குனர் மோகன்குமார் கூறினார். தென்மாநிலங்களில்

ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 740 ஹெக்டேர் பரப்பளவிலும், தமிழகத்தில் மட்டும் 80 ஆயிரத்து 462 ஹெக்டர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளன.வால்பாறையில் 12 ஆயிரத்து 628 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலை தூள் கோவை, குன்னூர், கொச்சி போன்ற ஏலமையத்திற்கு கொண்டு செல்லப் படுகின்றன. இது தவிர வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உபாசி தேயிலை ஆராய்ச்சியின் இயக்குனர் மோகன்குமார் கூறியதாவது:வால்பாறையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 15.7 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியானது. ஆனால் இந்த ஆண்டு 18.7 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியாகியுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 3 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியாகியுள்ளது.வழக்கமாக தென்மேற்குப்பருவ மழை பெய்வதால் ஜூன், ஜூலை மாதங்களில் தேயிலை உற்பத்தி வெகுவாக குறையும். செப்டம்பர், அக்டோபர், ஏப்ரல், மே மாதங்களில் மழைப்பொழிவு குறைந்துவிடுவதால் இந்த சிதோஷ்ணநிலையில் தேயிலை உற்பத்தி அதிகமாக காணப்படுகிறது.தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க எஸ்டேட் பகுதிகளில் நவீன இயந்திரங்கள் கொண்டுவரப் பட்டாலும், நிறைய எஸ்டேட்டுகளில் தேயிலை பறிக்க முடியாமல் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய இளைஞர்கள் யாரும் தேயிலை பறிக்கும் தொ ழிலில் ஈடுபடுவதில்லை. அடுத்த ஆண்டுகளில் வால்பாறையில் உள்ள எஸ்டேட்டுகளில் தேயிலை பறிக்க ஆள் இல்லாத நிலை ஏற்படும்.இதை சமாளிக்கும் வகையில் வெளிநாட்டிலிருந்து நவீன இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு தேயிலை பறிக்க எஸ்டேட் நிர்வாகங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. தேயிலை தொழிலிலில் உற்பத்தி பாதிக்காத அளவில் எஸ்டேட் நிர்வாகங்கள் முனைப்புடன் செயல்பட் டால், ஆண்டு தோறும் தேயிலை உற்பத்தி அதிகரிக்கலாம், என்றார்.

**காந்தமலர் சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம்; அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:29 IST

கரூர்: "அரவக்குறிச்சி பகுதியில் காந்தமலர் சாகுபடிக்கு, சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம்,' என, தோட்டக்லைத் துறை உதவி இயக்குநர் சவுந்தரம்மாள் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: அரவக்குறிச்சி வட்டாரத்தில் அதிகளவில் மருத்துவ பயிர்களான காந்தமலர், கோலியஸ் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகிறது. கடந்தாண்டு இப்பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்த விவசாயிகள், வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சி எடுத்த மகசூலை விட அதிகப்படியான மகசூல் கிடைத்து கூடுதல் லாபம் பெற்றனர். எனவே, நடப்பாண்டில் காந்தமலர் உள்ளிட்ட பயிர்களுக்கு விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். இந்த முறையை பின்பற்றுவதால், தண்ணீரை சேமிப்பதுடன், சாகுபடி பரப்பையும் அதிகரிக்கலாம். சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் மானியம் பெறவும், தொழில்நுட்ப ஆலோசனை பெறவும் அரவக்குறிச்சி வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்லை துறை அலுவலகத்தில் விண்ணப்பத்தை கொடுக்கலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**பயிர்களை சேதப்படுத்தும் மயில் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 11,2010,02:02 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் மயில்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. விவசாய நிலங்களில் பயிர்களை மயில்கள் சேதப்படுத்துவதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

கோபி தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பகுதியில் நடப்பாண்டு முதல்போக சாகுபடியில் நெல், கரும்பு, மஞ்சள் மற்றும் பல்வேறு தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை சாகுபடியும் கோபி பகுதியில் விறுவிறுப்பாக துவங்கியுள்ளது. நெற்பயிரில் கதிர் முற்றும் நிலையில் மயில்களின் நடமாட்டம் கோபி பகுதியில் அதிகமாக உள்ளது. குறிப்பாக ஈரோடு மற்றும் அந்தியூர் ரோட்டில் இருபுறமும் விவசாய நிலங்களில் நெல் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளது. காலை நேரங்களில் கூட்டம் கூட்டமாக வரும் மயில்கள் வயல்களில் துள்ளித் திரிந்து விளையாடுகின்றன. பொலவகாளிப்பாளையம், நஞ்சகவுண்டன்பாளையம், பாரியூர், புதுக்கரைபுதூர், சிறுவலூர், குள்ளம்பாளையம், ஒத்தகுதிரை, பொம்மநாயக்கன்பாளையம், மேவாணி, வெள்ளாங்கோயில், குருமந்தூர், கடத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் மயில்களின் நடமாட்டம் அதிகளவில் உள்ளது.

நெல், மஞ்சள் மற்றும் நிலக்கடலை வயல்களில் மயில்கள் அதிக சேதம் ஏற்படுத்துகின்றன. தேசிய பறவையான மயிலை விரட்டக் கூட முடியாத நிலையில் விவசாயிகள் தவித்து வருகின்றனர். கோபி வட்டார பகுதிகளில் சுற்றி திரியும் மயில்களை பாதுகாப்பாக வனப்பகுதிக்குள் விரட்ட, மாவட்ட வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வாழை பதனிடும் தொழிற்கூடம் அமைக்க ரூ.50 லட்சம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,23:47 IST

சின்னமனூர்: சின்னமனூரில் ஐந்து டன் கொள்ளளவு கொண்ட வாழை பதனிடும் தொழிற்கூடம் அமைக்க 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சின்னமனூர் மற்றும் சுற்றுப்பகுதியில் ஐந்தாயிரம் ஹெக்டேர் பரப்பில் வாழை சாகுபடி நடக்கிறது. இப்பகுதியில் ஜி.நைன் என்ற திசுவாழை வளர்ப்பு அதிகளவில் நடந்து வருகிறது. இப்பகுதியில் இருந்து தினமும் 70 டன் வாழைப்பழங்கள் பெங்களூர் சேப்பல் மார்க்கெட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறது. 10 டன் கொண்டு செல்ல எட்டாயிரம் ரூபாய் வரை செலவாகிறது. சின்னமனூரில் இருந்து பெங்களூர் கொண்டு செல்ல 15 மணி நேரம் ஆகிறது. இதற்குள் வாழைக் காய்கள் வாடி விடுகின் றன. எனவே

மாநிலத்தில் முதன் முறையாக சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஐந்து டன் கொள்ளவு கொண்ட வாழை பதனிடும் தொழிற் கூடம் அமைக்க 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பதனிடும் கூடத் தில் வாழைக்காய்களை அலுமினிய பவுடர் மூலம் சுத்தம் செய்து, பெரிஸ்டின் பவுடரால் காளான்நீக்கம் செய்து, 80 பி.பி.எம்., முதல் 100 பி.பி.எம்., வரையுள்ள எத்திலின் வாயு மூலம் பழுக்க வைக்கப் பட்டு, குளிர்பதன அறையில் சேமிக்கப்படுகிறது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா கலெக்டர் முத்துவீரன் தலைமையில் நடந்தது. மாநில விவசாய விற்பனைக்குழு தலைவர் கணேசன், மாவட்ட விவசாய விற்பனைக்குழு தலைவர் சண்முகவேல், நகராட்சி தலைவர் தமிழ்செல்வி, வழை முதுநிலை ஆராய்ச்சியாளர் ராம்டெக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**நெல் வயலில் எலிகளை ஒழிக்க விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2010,23:47 IST

கம்பம்: நெல் வயலில் எலிகளால் பயிர்கள் நாசம் செய்யப்படுவதை தவிர்க்க பறவை இருக்கை அமைக்க வேண்டும் என விவசாயிகளுக்கு விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. விவசாயத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராமராஜ் கூறியுள்ளதாவது; கம்பம் பள்ளத்தாக்கில் நெல் சாகுபடி செய்யப்பட் டுள்ளது. 30 முதல் 35 நாட்கள் ஆகியுள்ள நிலையில் பெரும்பாலான வயல் களில் எலிகளின் தொல்லை துவங்கியுள்ளது. எலிகளை ஒழிக்க பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகிறது. இருந்த போதும் வயல்களில் "பறவை இருக்கை' அமைப்பதன் மூலம் சிறந்த முறையில் எலிகளை ஒழிக்க முடியும். பறவை இருக்கைகள் வயல்களில் நடுபகுதியில் அமைப்பதால் பறவைகள் அமர்ந்து எலிகளை சாப்பிட்டு விடும். இரவு நேரங்களில் ஆந்தைகள் அமர்ந்து எலிகளை சாப்பிடும். பயிரின் மட்டத்திற்கு மேல் பகுதியில் 3 அடி உயரத்தில் இந்த பறவை இருக்கை அமைக்க வேண்டும். பறவை இருக்கைக்கு பதிலாக தஞ்சாவூர் கிட்டியும் அமைக்கலாம். சுற்றுப்புறச் சூழல் மாசுபடாத நிலையில் இந்த முறைகளில் எலிகளை அழிக்க முடியும். இதனால் பயிர் சேதம் தவிர்க்கப்படும். சில இடங்களில் முழுவதும் எலிகள் அழிக்கப் பட்டுவிடும் என்றார்.

**வட மாநிலங்களில் உற்பத்தி சரிந்துள்ள நிலையில்**

**பயன்பாடு அதிகரித்து வருவதால் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும்**

*சுதானுகா கோசல்*
*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*

*இந்தியாவின் தேயிலை உற்பத்தியில் 75 சதவீதம் அசாம், மேற்கு வங்காளம் ஆகிய வட மாநிலங்களில் உற்பத்தி ஆகிறது. இந்நிலையில், அம்மாநிலங்களில் தேயிலை உற்பத்தி சரிவடைந்து வருகிறது. அதேசமயம், உள்நாட்டில் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மேலும் ஏற்றுமதியும் உயர்ந்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கிறது.*

*கொல்கத்தா*

*இதனை உறுதிப்படுத்துகின்ற வகையில், கொல்கத்தாவில் உள்ள ஏல மையங்களில் ஆர்தோடக்ஸ், டார்ஜிலிங் உள்ளிட்ட அனைத்து வகையான தேயிலை ரகங்களின் விலையும் கிலோ ஒன்றிற்கு ரூ.23 அதிகரித்துள்ளது. சென்ற ஓர் ஆண்டில், சராசரியாக ஒரு கிலோ தேயிலை விலை ரூ.128.53–லிருந்து ரூ.151.72–ஆக உயர்ந்துள்ளது. சென்ற வாரத்தில் சிலிகுரி மற்றும் கவுஹாத்தி ஆகிய ஏல மையங்களில் ஒரு கிலோ தேயிலை விலை முறையே ரூ.4 மற்றும் ரூ.8 அதிகரித்துள்ளது.*

*உற்பத்தி*

*நடப்பு 2010–ஆம் ஆண்டு மே மாதத்தில், வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 30 லட்சம் கிலோ குறைந்துள்ளது. சென்ற ஜூன் மாதத்தில் இதன் உற்பத்தியில் அசாம் மாநிலத்தில் 1.30 கோடி கிலோ மற்றும் மேற்கு வங்காள மாநிலத்தில் 20 லட்சம் கிலோ சரிவடைந்துள்ளது. இதனையடுத்து, ஜூன் மாதத்தில், வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி ஒட்டுமொத்தத்தில் 1.50 கோடி கிலோ குறைந்துள்ளது. கனமழை காரணமாக, ஜூலை மாதத்திலும் வட மாநிலங்களில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது.*

*நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 21.20 கோடி கிலோவாக குறைந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே மாதங்களில் இது 22.20 கோடி கிலோவாக இருந்தது. ஆக, இம்மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 4.5 சதவீதம் சரிவடைந்துள்ளது.*

*தென் மாநிலங்கள்*

*அதேசமயம், இதே காலத்தில் தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 1.50 கோடி கிலோ அதிகரித்து 12.70 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்தள்ளது.*

வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி குறைந்துள்ள நிலையிலும், அம்மாநிலங்களில் உள்ள ஏல மையங்களுக்கு வரும் தேயிலையின் அளவு குறையவில்லை. ஆர்தோடக்ஸ் தேயிலை உற்பத்தி உயர்ந்துள்ளதால், நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கொல்கத்தா ஏல மையத்திற்கு வந்த தேயிலை அளவு 24 லட்சம் கிலோ உயர்ந்துள்ளது. இதே மாதங்களில், கொல்கத்தா ஏல மையத்திற்கு விற்பனைக்கு வந்த தேயிலையின் அளவு ஒட்டுமொத்தத்தில் 6.40 கோடி கிலோவிலிருந்து 7 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியால், தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, பல்வேறு நுகர்பொருள்களின் பயன்பாடு சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது. தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு சராசரியாக 3–3.5 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து வருகிறது. இதனால், எதிர்காலத்தில் தேயிலைக்கான தேவைப்பாடு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, நம் நாட்டில் ஓர் ஆண்டுக்கு தனிநபர் தேயிலை நுகர்வு 800 கிராம் என்ற அளவில் உள்ளது. இது, பாகிஸ்தானில் ஒரு கிலோ என்ற அளவில் உள்ளது.

ஏற்றுமதி

நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், வட மாநிலங்களில் தேயிலை ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே காலத்தை காட்டிலும் 20 லட்சம் கிலோ குறைந்துள்ளது. அதேசமயம், வெளிநாடுகளில் ஒரு கிலோ தேயிலைக்கு ரூ.7 கூடுதல் விலை கிடைத்துள்ளது.

தென் மாநிலங்களிலிருந்து ஏற்றுமதியான தேயிலைக்கு சற்று குறைந்த விலையே கிடைத்துள்ளது. இருப்பினும், நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இம்மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி 1.20 கோடி கிலோ உயர்ந்துள்ளது. இதனையடுத்து, ஒட்டுமொத்தத்தில் நாட்டின் தேயிலை ஏற்றுமதி 12 சதவீதம் அதிகரித்து 7.50 கோடி கிலோவிலிருந்து 8.40 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இதன் வாயிலாக மொத்தம் ரூ.1,036 கோடி அன்னியச் செலாவணி வருவாய் கிடைத்துள்ளது.